பாடம் 1 மார்ச் 26 – ஏப்ரல் 1

# சிருஷ்டிப்பு



**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** சங் 100:1–3; ஆதியாகமம் 1; 2; யாத் 20:8–11; 40:33; மத் 25:14–30; 19:7–9.

**மனன வசனம்:** ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்'. ஆதி 1:1.

தேவனுடைய சிருஷ்டிப்புச் செயல்களோடு ஆதியாகமம் தொடங்குகிறது; அதாவது வேதாகமத்தின் தொடக்கமே சிருஷ்டிப்புபற்றியதுதான். சிருஷ்டிப்புதான் மனித வரலாற்றின், வேதாகம வரலாற்றின் ஆரம்பம். எனவே மனித வரலாறும் வேதவரலாறும் எவ்வளவு உண்மையோ, அதேபோல ஆதியாகமத்தின் சிருஷ்டிப்பு வரலாறும் உண்மையானது.

சிருஷ்டிப்புச் சம்பவங்கள் அடங்கியுள்ள ஆதியாகமத்தின் 1,2ம் அதிகாரங்களில், தேவனையும் மனுக்குலத்தையும் குறித்த படிப்பினைகள் உள்ளன. அது மட்டும் அல்ல; ஏழாம் நாள் ஓய்வுநாள்பற்றி ஆழமாகப் புரிந்துகொள்ளவும் முடிகிறது. மனிதர்களை தேவன் தம் சாயலில் சிருஷ்டித்தார்; ஆனால் மண்ணிலிருந்து சிருஷ்டித்தார்; பூமியிலே நன்மைதீமை அறியத்தக்க விருட்சமும் ஜீவ விருட்சமும் இருந்தன; அவற்றையும் தியானிப்போம்.

வேதாகமத்தின் தொடக்கச் சம்பவங்கள் கற்பிக்கிற மிகமுக்கியப் பாடம் கிருபைபற்றியதாகும். நாம் உயிரோடு இருப்பது முற்றிலும் கிருபையால் மட்டுமே. மனிதர்களைச் சிருஷ்டிக்கும் முன்னரே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். நம் சிருஷ்டிப்புபோல, நம் மீட்பும் தேவனுடைய ஈவால் உண்டானதே. சிருஷ்டிப்புக் கருத்தும், மீட்புக் கருத்தும் ஏழாம் நாள் ஓய்வுநாள் கற்பனையில் அடங்கியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது.

*2021, ஏப்ரல் 2 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# சிருஷ்டிப்பின் தேவன்

**சிருஷ்டிப்பின் தேவனை மனிதர்கள் எவ்வாறு பார்க்கவேண்டும்? ஏன்? சங் 100: 1-3.**

சிருஷ்டிப்பு சம்பவம் சொல்லும் முதல் செய்தி 'தேவன்'. ஆதி 1. 'ஆதியிலே தேவன்' என்று முதல் வசனம் தொடங்குகிறது. ஆதி 1:1. மூலமொழியில் முதல் வசனத்தின் முதல் வரியில் 'தேவன்' எனும் வார்த்தை மத்தியில் வருகிறது. எபிரெய வழிபாடுகளில், அந்த வரியைச் சொல்லும்போது, தேவனுடைய மகத்துவத்தை உணர்த்தும்வகையில் 'தேவன்' எனும் வார்த்தையை அதிகம் வலியுறுத்துவார்கள். எனவே சிருஷ்டிப்பு சம்பவமானது, சிருஷ்டிப்பின் ஆதாரமான தேவனை வலியுறுத்தித் தொடங்குகிறது.

ஆதியாகமப் புத்தகம் துவக்கத்திலேயே தேவனை இரண்டு வகையில் அறிமுகம் செய்கிறது. முதலாவது, சிருஷ்டிப்புச் சம்பவம் தேவனை மனிதர்களுக்கு எட்டாத தூரத்தில் இருப்பவராக, அனைத்தையும் கடந்த ஏலோஹிமாக அறிமுகம் செய்கிறது. ஆதி 1:1-2:4. ஏலோஹிம் என்றால் ராஜாதி ராஜா, ஒப்புயர்வற்றவர், வல்லவர், மகத்துவர், அனைத்தையும் கடந்தவர் என்று அர்த்தம்.

இரண்டாவது, சிருஷ்டிப்புச் சம்பவம் தேவனை நமக்கு மிகவும் நெருக்கமாக, அருகில் இருக்கிற யாவேயாக அறிமுகம் செய்கிறது. ஆதி 2:4-25. யாவே என்றால் மிகவும் நெருக்கமான உறவில் இருப்பவர் என்று அர்த்தம். எனவே சிருஷ்டிப்புச் சம்பவமானது தேவனை நாம் தொழுதுகொள்வதற்கான ஓர் அழைப்பாக உள்ளது. முதலாவது தேவனுடைய எல்லையில்லா மாட்சிமையையும் வல்லமையையும் உணரவேண்டும்; அதேநேரம், அவரைச் சார்ந்தே நாம் இருப்பதை உணரவேண்டும். ஏனென்றால் 'நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்'. சங் 100:3. அதனால்தான் பல சங்கீதங்கள் தொழுகையை சிருஷ்டிப்புடன் இணைத்துச் சொல்கின்றன. சங் 95:1-6; 139:13, 14; ஒப்பிடவும் வெளி 14:7.

தேவன் மகத்துவர், வல்லமையுள்ளவர்; அதேசமயம் அவர் நம்மோடு நெருக்கமானவர், அன்புள்ளவர், உறவை விரும்புகிறவர் என்கிற இருதலை கருத்தானது, தேவனை நாம் தொழவேண்டிய விதத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. தேவன்மேல் பயபக்தியும் மரியாதையும் இருக்கவேண்டும்; அதேநேரம் தேவன் அருகில் இருக்கிறார், அவர் மன்னிக்கிறார், அன்புகாட்டுகிறார் என்கிற சந்தோஷமும் நிச்சயமும் வேண்டும். சங் 2:11. தேவனைப்பற்றிய இந்த இருவேறு அறிமுகங்கள் ஒரு விஷயத்தை உணர்த்தவேண்டும். அதாவது, தேவன் எட்டாத தூரத்தில் இருந்தாலும் அவரை நமக்கு அருகில், நெருக்கமாக நாம் உணரலாம் என்பதே. தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை உணர்ந்தால்தான, அவர் கிருபையின் மதிப்பு புரியும்; அவருடைய அன்பையும், அற்புத பிரசன்னத்தையும் எண்ணி, பயபக்தியோடு மகிழமுடியும்.

**பிரபஞ்சத்தைத் தாங்குமளவிற்கு எல்லையில்லா வல்லமை உடைய தேவன், நம் ஒவ்வொருவருக்கும் சமீபமாகவும் இருப்பது பற்றி யோசியுங்கள். இந்த அற்புத உண்மை ஏன் உண்மையிலேயே அற்புதமானது?**

# சிருஷ்டிப்பு

**முதல் சிருஷ்டிப்புப் பதிவில் 'அது நல்லது என்று கண்டார்' எனும் வார்த்தைகள் பல்லவிபோல மீண்டும்மீண்டும் வருகின்றன. அதிலுள்ள முக்கியத்துவம் என்ன? ஆதி 1:4,10,12,18,21,25,31; ஆதி 2:1-3. சிருஷ்டிப்பின் முடிவில் என்ன பாடம் உள்ளது? ஆதி 2:1-3.**

சிருஷ்டிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் தம் வேலையை தேவன் மதிப்பிட்டு, 'நல்லது' என்று சொன்னார். அதற்கான எபிரெய வார்த்தை டவ். இந்தப் பெயரடைச் சொல்லானது தேவன் வெற்றிகரமாக சிருஷ்டிப்பு கிரியையை நிகழ்த்தியதைச் சுட்டிக்காட்டுகிறது. 'அது நல்லது என்று கண்டார்' என்றால் 'கிரியை வெற்றிகரமாக நடந்தது' என்று அர்த்தம். அதாவது, வெளிச்சம் வீசியது; விருட்சங்கள் கனிகளைக் கொடுத்தன. ஆதி 1:4; 1:12.

ஆனால் டவ் என்பது, தேவன் வெற்றிகரமாக கிரியையை நிகழ்த்தியதை மட்டும் அல்ல, அது அழகாகவும் இருந்ததென மெச்சிப்பேசுகிற சொல்லாகவும் வேதாகமத்தில் வருகிறது. ஆதி 24:16. மேலும் மரணம் எனும் தீமைக்கு எதிர்ப்பத வார்த்தையாகவும் வருகிறது. ஆதி 2:17; 2:9.

'அது நல்லது என்று கண்டார்' என்றால், சிருஷ்டிப்பு அற்புதமாகச் செயல்பட்டது; மிக அழகாகவும் பூரணமாகவும் இருந்தது; அதில் தீமையே இருக்கவில்லை என்றும் அர்த்தமாகும். உலகத்தில் பாவமும் மரணமும் 'இன்னும்' பிரவேசித்திருக்கவில்லை. அந்தக் கருத்தை இரண்டாம் சிருஷ்டிப்புப் பதிவில் காண முடிகிறது. ஆதி 2:5.

சிருஷ்டிப்புபற்றிய இந்த விளக்கம் பரிணாமக் கொள்கைகளை முற்றிலும் மறுக்கிறது. ஏனென்றால் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்த எதிர்பாராத நிகழ்வுகளால், கீழான நிலையிலிருந்து மேலான ஒரு நிலை உண்டானதாக பரிணாமக் கொள்கை சொல்கிறது.

ஆனால் தேவன் திட்டமிட்டு, உடனடியாக உலகத்தைச் சிருஷ்டித்ததாக ஆதியாகம ஆசிரியர் சொல்கிறார். ஆதி 1:1. எதுவுமே எதேச்சையாக நிகழவில்லை. உலகம் தானாக உண்டாகவில்லை; தேவனுடைய சித்தத்தாலும் வார்த்தையாலும் உண்டானது. ஆதி 1:3. ஆதியில் தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்பதில், 'சிருஷ்டிப்பு' என்பதற்கான எபிரெய வார்த்தை 'பாரா'; தேவனை எழுவாயாக வைத்துமட்டுமே இந்த வார்த்தை வருகிறது; எனவே தேவன் சொன்னார்; அது உண்டாயிற்று என்பதை ஆணித்தரமாகச் சொல்கிறது.

எனவே 'எல்லாவற்றையும்' தேவன் அப்போதுதான் உண்டாக்கினார். ஆதி 1:31. எனவே சிருஷ்டிகர் மட்டுமே அனைத்தையும் 'மிகவும் நல்லது' என்று மதிப்பிட்டார். ஆதி 1:31. வானத்தையும் பூமியையும் தேவன் சிருஷ்டித்ததாக ஆதி 1:1 சொல்கிறது; எல்லாம் உண்டாக்கப்பட்டு தீர்ந்ததாக ஆதி 2:1 சொல்கிறது. ஓய்வுநாள் உட்பட எல்லாவற்றையும் ஏழுநாட்களில் சிருஷ்டித்துவிட்டார்.

---

**கோடிக்கணக்கான வருடங்களாக பரிணாம வளர்ச்சி ஏற்பட்டதென்கிற கருத்து எவ்வாறு ஆதியாகமத்தின் சிருஷ்டிப்பு சம்பவத்தைப் பொய்யாக்க முயல்கிறது? இந்த இரண்டும் எவ்வாறு ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன?**

# ஓய்வுநாள்

**ஏழாம்நாள் ஓய்வுநாள் எவ்வாறு சிருஷ்டிப்புடன் சம்பந்தப்படுகிறது? ஓய்வுநாளை நாம் ஆசரிப்பதில் எத்தகைய தாக்கத்தை இந்தத் தொடர்பு உண்டாக்க வேண்டும்? ஆதி 2:2,3; யாத் 20:8-11.**

தேவன் தம் சிருஷ்டிப்பின் கிரியைகளை 'நிறைவேற்றினதால்' ஓய்வுநாளை ஏற்படுத்தினார். எனவே ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரிக்கும்போது, தேவன் தம் கிரியைமுடித்து, அதை 'மிகவும் நல்லது' என்று கண்டதை நாம் விசுவாசிக்கிறோமென்று காட்டுகிறோம்; தேவன் தம் சிருஷ்டிப்பை மதித்து, அதன் அழகை மெச்சினதுபோல, நாமும் செய்வோமெனக் காட்டுகிறோம்.

தேவன் தம் வேலைகளை முடித்து ஓய்ந்திருந்ததுபோல, நாமும் ஓய்ந்திருக்கலாம். ஓய்வுநாளை ஆசரிப்பதால், நம் சரீரங்கள் உட்பட தேவன் சிருஷ்டித்த அனைத்தும் 'மிகவும் நல்லது' என்பதை ஒத்துக்கொள்கிறோம். சரீரம் மோசமானது என்று சில பண்டைய, நவீன கோட்பாடுகள் சொல்கின்றன; பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் அப்படிச் சொல்லவே இல்லை. அது அஞ்ஞானக் கருத்து; வேதாகமக் கருத்தல்ல. மாறாக, ஓய்வுநாளை ஆசரிக்கும்போது, நம் சரீரம் உட்பட தேவன் சிருஷ்டித்த ஒவ்வொன்றிற்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாக இருப்பதைக் காட்டுகிறோம்; அப்போதுதான் சிருஷ்டிப்பை மகிழ்ச்சியாக அனுபவிக்க முடியும்; அதன்மேல் அக்கறை காட்டமுடியும்.

மனித வரலாற்றின் படிப்படியான நிகழ்வின் முதல் 'நிறுத்தத்தை' ஓய்வுநாள் குறிக்கிறது; எனவே மனுக்குலத்தின் பாடுகளுக்கும், உலகத்தின் வேதனைகளுக்கும் ஒரு முடிவு இருப்பதற்கான நம்பிக்கையைக் கொடுக்கிறது. 'கிரியையை நிறைவேற்றி' என்கிற அதே சொற்றொடர்தான், ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டி முடித்தபோதும், பிறகு சாலொமோன் தேவாலயத்தைக் கட்டி முடித்தபோதும் வருகிறது. யாத் 40:33; 1இராஜா 7:40,51. இரண்டு இடங்களுமே நற்செய்தி, இரட்சிப்பு குறித்த படிப்பினைகளைப் போதித்த இடங்களாகும்.

விழுகைக்குபிறகு, வாரத்தின் ஏழாம் நாளான ஓய்வுநாள் இரட்சிப்பின் அற்புதத்தைச்சுட்டிக்காட்டுகிறது; அந்த இரட்சிப்பு புதுச்சிருஷ்டிப்பினால் மட்டுமே சாத்தியமாகும். ஏசா 65:17; வெளி 21:1. இந்த உலகத்தின் உபத்திரவங்களுக்கும் சோதனைகளுக்கும் முடிவு இருப்பதை ஒவ்வொரு வாரத்தின் இறுதியிலும் சுட்டிக்காட்டுகிற ஓர் அடையாளம் ஓய்வுநாள்.

அதனால்தான் வியாதியஸ்தர்களைக் குணமாக்க மிகச்சரியான நாளாக ஓய்வுநாளை இயேசு தேர்ந்தெடுத்தார். லூக் 13:13-16. யூதத்தலைவர்கள் பல்வேறு பாரம்பரியங்களைப் பின்பற்றியிருக்கலாம்; ஆனால் இயேசு, ஓய்வுநாளில் குணமாக்கியதன்மூலம், சகல உபத்திரவங்களும் மரணங்களும் ஒருநாளில் ஒழிந்துபோகும் என்பதை மக்களுக்குச் சுட்டிக்காட்டினார்; மீட்பின் திட்டத்தின் முடிவில் அது நடக்கும். ஒவ்வோர் ஓய்வுநாளும் மீட்பின் நம்பிக்கையைச் சுட்டிக்காட்டுகிறது.

---

**புதிய வானமும் புதிய பூமியும் சிருஷ்டிக்கப்படும்போது நிறைவேறப்போகிற, இப்போதே இயேசுவில் நாம் பெற்றிருக்கிற இரட்சிப்பையும் இளைப்பாறுதலையும் ஓய்வுநாளில் ஓய்ந்திருப்பதன்மூலம் எவ்வாறு அனுபவிக்கிறோம்?**

# மனுக்குலச் சிருஷ்டிப்பு

ஆதியாகமச் சிருஷ்டிப்புப் பதிவின்படி, மனிதர்களை தேவன் கடைசியாகச் சிருஷ்டித்தார். பூமியின் சகல சிருஷ்டிப்பின் நிறைவாக மனிதனைச் சிருஷ்டித்தார்; மனிதன் வாழத்தான் பூமியையே சிருஷ்டித்தார்.

**ஆதி 1:26-29 இலும், ஆதி 2:7 இலும் சிருஷ்டிப்புகுறித்த தகவல்கள் உள்ளன; இந்த இரண்டு வெவ்வேறு தகவல்களும் மனுக்குலத்தின் சிருஷ்டிப்போடு எவ்வாறு சம்பந்தப்படுகின்றன?**

தேவன் தம் சாயலில் மனிதனைச் சிருஷ்டித்தார் என்பது வேதாகமத்தில் தனித்துவமான ஒரு வாக்கியமாகும். மனிதர்களைமட்டுமே தேவன் தம் சாயலில் சிருஷ்டித்தார். 'தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டுமிருகங்களை உண்டாக்கினார்'. ஆதி 1:25. ஆனால் மனுஷனை, 'தம்முடைய சாயலாக சிருஷ்டித்தார்'. ஆதி 1:27. இந்த உண்மையை பெரும்பாலும் மனிதர்களின் ஆவிக்குரிய இயல்போடு மட்டுமே சம்பந்தப்படுத்திப் பேசுகிறார்கள்; 'தேவனுடைய சாயல்' என்பது தேவனுக்குச் செய்கிற நிர்வாகப் பணியுடன் சம்பந்தப்பட்டதென்றும், தேவனோடும் ஒருவர் ஒருவரோடும் உள்ள உறவின் ஆவிக்குரிய அம்சத்தோடு சம்பந்தப்பட்டதென்றும் கருதுகிறார்கள்.

இந்தப் புரிதல்களில் தவறில்லை என்றாலும், உடல் ரீதியான அம்சங்களும் சம்பந்தப்பட்டிருப்பது உண்மை. 'சாயல்', 'சொரூபம்' எனும் வார்த்தைகள் இந்த இரண்டு பரிமாணங்களையும் சுட்டிக்காட்டுகின்றன. ஆதி 1:26. 'சாயல்' என்பதற்கான எபிரெய வார்த்தை ட்ஸெலெம்; அது, உடலின் அமைப்பைச் சுட்டிக்காட்டுகிறது. 'சொருபம்' என்பதற்கான எபிரெய வார்த்தை டிமட்; தெய்வீக இயல்புள்ள ஒருவரிடம் காணப்படுகிற தனிப்பண்புகளைச் சுட்டிக்காட்டுகிறது.

எனவே 'தேவனுடைய சாயல்' என்பதற்கான எபிரெய வார்த்தைகள் உடல் அம்சங்களையும் ஆவிக்குரிய அம்சங்களையும் உள்ளடக்கியவையாகும். ஆண்களும் பெண்களும் உடல்ரீதியாகவும் ஆவிக்குரிய ரீதியாகவும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டதை வேதாகமம் உறுதிப்படுத்துகிறது. 'சிருஷ்டிகருடைய கரங்களிலிருந்து ஆதாம் வந்தபோது, உடலிலும் மனதிலும் ஆவிக்குரிய இயல்பிலும் தன் சிருஷ்டிகரின் சாயலைப் பெற்றிருந்தான்'.[1]

தேவனுடைய சாயல் என்பதில் உடல் அம்சமும், ஆவிக்குரிய அம்சமும் அடங்கும் என்பதை சிருஷ்டிப்புகுறித்த இரண்டாம் பதிவு மீண்டும் வலியுறுத்துகிறது. அதாவது, 'மனுஷன் ஜீவாத்துமாவானான்'. ஆதி 2:7. இதற்கான எபிரெய வார்த்தை நெஃபெஷ். இதில் தேவன் செய்த இரண்டு செயல்கள் சம்பந்தப்படுகின்றன. தேவன் 'உருவாக்கினார்'; சுவாசத்தை 'ஊதினார்'. சுவாசத்தை ஊதுதல் என்பது ஆவிக்குரிய பரிமாணத்தைக் குறிக்கிறது; அதுமட்டுமல்ல, 'பூமியின் மண்ணினாலே உருவாக்கின' பிறகு, மனிதன் சுவாசத்திறனைப் பெற்றதையும் சுட்டிக்காட்டுகிறது. ஜீவன் + சுவாசம் = ஜீவசுவாசம். ஜீவன் என்பது உடல் அம்சத்தையும், சுவாசம் என்பது ஆவிக்குரிய அம்சத்தையும் குறிக்கிறது.

[1] Education, p. 15.

**மூன்றாவது செயலாக, மனிதனின் உடலிலிருந்து மனுஷியைச் சிருஷ்டித்தார். ஆதி 2:21,22. மனுஷனுடைய அதே இயல்பை அவளும் பெற்றிருந்ததை அது சுட்டிக்காட்டுகிறது.**

# மனுக்குலத்தின் கடமை

முதல் மனிதனுக்கு தேவன்மூன்று பரிசுகளை கொடுத்தார்.

1) ஏதேன் தோட்டம். ஆதி 2:8.

2) உணவு. ஆதி 2:16.

3) ஸ்திரீ. ஆதி 2:22.

**தேவனுக்கும் சிருஷ்டிப்புக்கும் மனிதன் செய்யவேண்டிய கடமை என்ன? ஆதி 2:15-17. இவை எவ்வாறு சம்பந்தமுள்ளவை?**

---

மனிதனின் **முதல் கடமை** சுற்றுச்சூழல் சம்பந்தமானது; அதாவது அதை 'அதைப் பண்படுத்தவும் காக்கவும்' வேண்டும். ஆதி 2:15. பண்படுத்தல் என்பதற்கான எபிரெய வார்த்தை அவாட்; அது வேலையைக் குறிக்கிறது. ஒரு பரிசைப் பெற்றால்மட்டும் போதாது. அதை பிரயோஜனமாகப் பயன்படுத்தவேண்டும். தாலந்துகள்குறித்த உவமையில் இயேசு அந்த உண்மையை வலியுறுத்தினார். மத் 25:14-30. 'காத்தல்' என்பதற்கான எபிரெய வார்த்தை ஷமார். பெற்றுக்கொண்ட ஒன்றை பத்திரமாகப் பாதுகாக்கிற கடமையை அது சுட்டிக்காட்டுகிறது.

**இரண்டாவது கடமை** உணவு சம்பந்தப்பட்டது. அதை தேவன்தாம் மனிதர்களுக்குக் கொடுத்தார். ஆதி 1:29. ஆதாமிடம் தேவன், 'புசிக்கவே புசிக்கலாம்' என்று சொன்னார். ஆதி 2:16. மரங்களையோ மரங்களின் விளைச்சலையோ மனிதர்கள் உண்டாக்கவில்லை. அவற்றை கிருபையின் ஈவாகக் கொடுத்தார்.

'சகல விருட்சத்தின்' கனியையும் புசித்து, அனுபவிக்கும்படி ஒரு கட்டளை கொடுக்கிறார். அந்தக் கிருபையின் ஈவில் ஒரு நிபந்தனை வைக்கிறார். ஒரு குறிப்பிட்ட மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது. கட்டுப்பாடின்றி எதையும் அனுபவிப்பது மரணத்தில் முடியும். அந்த நியதியை ஏதேன் தோட்டத்திலேயே கொடுத்தார். அதே நியதி பலவிதங்களில் இன்றைக்கும் பொருந்தும்.

**மூன்றாவது கடமை,** தேவன் கொடுத்த மூன்றாம் பரிசு ஸ்தீரி சம்பந்தப்பட்டது. 'புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்'. ஆதி 2:24. இது தனிச்சிறப்புமிக்க ஓர் அறிக்கை; திருமண உடன்படிக்கையில் மனிதனுக்குள்ள கடமையையும், 'ஒரே மாம்சமாக' இருப்பதின் நோக்கத்தையும் அடிகோடிட்டுக் காட்டுகிறது. ஒரே மாம்சமாக இருப்பதென்றால் ஒன்றிணைந்து விடுவதாகும். ஒப்பிடவும்: மத் 19:7-9.

ஸ்திரீ அல்ல, மனுஷன் தன் பெற்றோரைவிட்டுச் செல்லுமாறு சொல்கிறது. பொதுவாகப் பேசும்போது இருபாலரையும் ஆண்பாலில் பேசுவது வேதாகம வழக்கம். எனவே இந்தக் கட்டளை பெண்களுக்கும் பொருந்தும். எப்படியிருந்தாலும் திருமணம் தேவனுடைய ஒரு பரிசு; ஆனால் அந்தப் பரிசைப் பெற்றவர் அதைக் கட்டிக்காக்கிற பொறுப்பைப் பெறுகிறார். சம்பந்தப்பட்ட ஆணும் பெண்ணும் அந்தப் பொறுப்பை உண்மையோடு நிறைவேற்றவேண்டும்.

---

**தேவன் உங்களுக்கு அருளியுள்ள அனைத்து ஈவுகளையும் எண்ணிப்பாருங்கள். நீங்கள் பெற்றுள்ள பரிசுகளில் உங்கள் கடமை என்ன?**

# மேலும் படிக்க:

'இயற்கையும், வெளிப்பாடும் இரு புத்தகங்கள்; இரண்டிலும் ஒரே நிபுணரின் தனித்துவத்தன்மைகள் பதிந்திருப்பதால், ஒன்றுக்கொன்று முரணாகப் பேச வாய்ப்பே இல்லை. வெவ்வேறு பாணிகளிலும் மொழிகளிலும் பேசினாலும், அதே மாபெரும் சத்தியங்களைதாம் வித்தியாசமின்றி சாட்சியிடுகின்றன. அறிவியல் புதுப்புது கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி வருகிறது; ஆனால் அறிவியல் ஆராய்ச்சியையும் சரியாகப் புரிந்துகொண்டால், தேவன் வெளிப்படுத்தியுள்ளவற்றிற்கு அது முரணாக இருக்காது என்பது தெளிவாகும். இயற்கை எனும் புத்தகமும் எழுதப்பட்ட வார்த்தையும் ஒன்றையொன்று புரிந்துகொள்ள உதவுகின்றன. தேவன் செயல்படுகிற விதிகளை சற்றே நமக்கு விளக்கி, அவரை நன்கு அறிந்துகொள்ள உதவுகின்றன.

'இயற்கை உணர்த்திய உண்மைகளை தவறாகப் புரிந்துகொள்ளும்போது, அறிவியலும் வெளிப்பாடும் முரண்படுவதாக முடிவுசெய்யத் தூண்டும்; அந்த முரணைச் சரிசெய்ய, வேதவசனங்களுக்கு தவறான அர்த்தம் கற்பிக்கிறார்கள்; அது தேவ வார்த்தையின் ஆற்றலை மட்டுப்படுத்தி, அழிக்கிறது. புவியியலும் மோசேயின் சிருஷ்டிப்பு பதிவும் முரண்படுவதாகக் கருதுகிறார்கள். ஏடாகூடமான நிலையிலிருந்து இந்தப் பூமி பரிணமித்து வருவதற்கு லட்சக்கணக்கான வருடங்கள் ஆனதாகச் சொல்கிறார்கள்; அறிவியலின் இந்தக் கற்பிதக் கருத்துக்கு வேதாகமத்தை வளைந்துபோகச் செய்வதற்காக ஒவ்வொன்றையும் பல கால இடைவெளியில் சிருஷ்டித்ததாகவும், அதற்கு ஆயிரக்கணக்கான அல்லது லட்சக்கணக்கான வருடங்கள் ஆனதாகவும் சொல்கிறார்கள்.

'இத்தகைய கருத்தை முற்றிலும் நிராகரிக்கவேண்டும். வேதாகமப் பதிவு வேதாகமத்திற்கும், இயற்கைக்கும் முரணேதும் இல்லையெனக் காட்டுகிறது'.[1]

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *'சிருஷ்டிப்புகுறித்த சம்பவங்கள் ஆவிக்குரிய பாடங்களைப் போதிப்பதற்காக உருவாக்கப்பட்ட புராணக்கதைகள், 'கட்டுக்கதைகள்'; வரலாற்றில் நிகழவில்லை' என்பதை நாம் நம்பினால், நம் விசுவாசத்தின் தரம் எவ்வாறு பாதிக்கப்படும்? ஆதியாகமத்தின் பிற சம்பவங்களைப்போல சிருஷ்டிப்பு சம்பவமும் வரலாற்றில் நிகழ்ந்த ஒன்று என்பதை அதை எழுதின ஆசிரியர் உணர்ந்திருந்ததை வேதாகமத்தில் சுட்டிக்காட்டுகிற குறிப்புகள் என்ன? இந்தச் சம்பவங்கள் வரலாற்றில் நிகழ்ந்தவை என்பதற்கு இயேசு எவ்வாறு சாட்சிதருகிறார்?*

2 *நாம் பூமியின் உக்கிராணக்காரர்கள் என்பதை ஆதியாகமச் சம்பவம் எவ்வாறு போதிக்கிறது? இந்தக் கிரகத்தின் நல்ல உக்கிராணக்காரர்களாக இருக்க முயற்சிக்கும்போது, சிருஷ்டிகரைத் தொழாமல் சிருஷ்டியைத் தொழுமாறு நாம் வஞ்சிக்கப்பட வாய்ப்புள்ளது; அந்த ஆபத்திலிருந்து எவ்வாறு தப்பலாம்? ரோமர் 1:25.*

3 *பாவமானது ஆயிரக்கணக்கான வருடங்கள் இந்தப் பூமியைச் சூறையாடி வருகிறது; ஆனாலும் 'மிகவும் நல்லது' என்று தேவன் கண்ட சிருஷ்டிப்பானது தன் ஆதி அருமையையும் அழகையும் எவ்வாறெல்லாம் இன்னும் வெளிப்படுத்தி வருகிறது; எவ்வாறெல்லாம் தேவனுடைய தயவையும் பராக்கிரமத்தையும் வல்லமையாகப் பறைசாற்றி வருகிறது?*

# ஓய்வுநாள்நிமித்தம் நிந்தை

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

லைஸ்ஸா ஸமிலா மொசம்பிக்கில் வசிக்கிறாள். ஓய்வுநாளில் வகுப்புக்குச் செல்வதில்லை; அதனால் மாணவர்கள் அவளைப் பரியாசம்பண்ணினார்கள். "படிக்க வந்தாயா, சபை போதனைகளின்படி நடக்க வந்தாயா?", "உனக்கு பைத்தியம்பிடித்துவிட்டதா?" என்றெல்லாம் கேலிசெய்தார்கள்.

அவள் அரசு பல்கலைக்கழகத்தில், எந்திரப் பொறியாளர் பிரிவில் முதல் பருவம் படித்துக் கொண்டிருந்தாள். சகமாணவியான பெலிஸாரியோ எனும் செவந்த்–டே அட்வெண்டிஸ்ட் மாணவியுடன் சேர்ந்து கிறிஸ்தவப் பாடல்களைக் கேட்பாள். பிறகு இருவரும் சேர்ந்து வேதாகமத்தை ஆராய்ந்தார்கள். லைஸ்ஸாவுக்கு வேறு புது நண்பர்களும் இருந்தார்கள்; அவர்களும் வேதாகமத்தை ஆராய்ந்து வந்தார்கள்.

வேதாகமத்தை அதிகமாக ஆராய்ந்தபோது, பயங்கர குழப்பம் உண்டானது. இரண்டு வேத ஆராய்ச்சிகளும் ஓய்வுநாள் விஷயத்தில் முரண்பட்டன. அதனால் இரண்டுக்கும் செல்வதை நிறுத்திவிட்டு, அவளே வேதாகமத்தை ஆராய ஆரம்பித்தாள். ஜெபத்தோடு, யாத் 20:8–11இல் உள்ள நான்காம் கற்பனையை வாசித்தாள். ஏசாயாவின் வார்த்தைகளையும், இயேசுவின் அழைப்பையும் வேதாகமத்திலிருந்து வாசித்தாள். ஏசா 58:13; யோவான் 14:15. பிறகு, ஓய்வுநாளைக் கைக்கொள்ளத் தீர்மானித்தாள்.

முதலில் லைஸ்ஸா தன் தீர்மானத்தை யாரிடமும் சொல்லவில்லை. மற்றவர்கள் கேலி செய்வார்களெனப் பயந்தாள்; ஆசிரியர்களிடம் சென்று ஓய்வுநாளில் விடுப்புக் கேட்கவும் பயமாக இருந்தது. பிறகு, பெற்றோர்கள் திட்டுவார்களோ என்றும் பயந்தாள். ஆனாலும் தன் நம்பிக்கையை நீண்ட நாட்களுக்கு மறைத்துவைக்க முடியவில்லை. இரண்டாம் பருவ ஆண்டின் முடிவில், தான் அட்வெண்டிஸ்டாக மாறப்போவதாக அறிவித்தாள். அவள் பயந்தது போலவே நடந்தது. அவளுடைய முன்னாள் நண்பர்கள் அவளைக் கேலிசெய்தார்கள். அவள் பெலிஸாரியோவுடன் நடந்துசென்றபோது, "ஓ, அட்வெண்டிஸ்டுகள் போகிறார்கள்" என்று நக்கல் பண்ணினார்கள். வகுப்புகளை ஓய்வுநாளில் நடத்தாமல் வேறு நாட்களில் நடத்த ஆசிரியர்கள் சம்மதிக்கவில்லை. "உனக்கு விருப்பமில்லை என்றால், வேறு கல்லூரிக்குச் சென்றுவிடு" என்று சொன்னார்கள். அவள் அம்மா பயங்கரமாகக் கோபப்பட்டார்; அவள் அப்பா அவளை மகளே இல்லையென்று சொல்லிவிட்டார்.

பிறகு மொசம்பிக் அட்வெண்டிஸ்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்து ஒரு மாணவரை திருச்சபையில் லைஸ்ஸா சந்தித்தாள். மொசம்பிக்கில் அட்வெண்டிஸ்ட் பல்கலைக்கழகம் இருக்கிறதெனக் கேள்விப்பட்டதும் மிகவும் சந்தோஷப்பட்டாள். தன்னை அங்கு மாற்றும்படி அம்மாவிடம் கெஞ்சினாள். முதலில் அம்மா மறுத்தார். பிறகு எஸ்தர் ராணியைப் போல லைஸ்ஸா மூன்று நாட்கள் உபவாசமிருந்து ஜெபித்த பிறகு, மனதை மாற்றினார். அட்வெண்டிஸ்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தபிறகு தனக்கு படிப்புக்கட்டணம் செலுத்தவேண்டாம் என்று சொல்லிவிட்டாள். ஏனென்றால் அங்குள்ள நூலகத்தில் வேலைசெய்து அதற்கான பணத்தைச் சம்பாதித்தாள். அவள் அம்மா ஆச்சரியப்பட்டார்.

